செ.வெ.எண்:21
நாள்:13.09.17

# பத்திரிக்கை செய்தி

அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் விரிவுரையாளர்கள் பணியிடங்களுக்கான நேரடி நியமன போட்டி எழுத்துத் தேர்வு 16.9.2017 சனிக்கிழமை அன்று நடைபெற உள்ளது.

கடலூர் மாவட்டத்தில் இத்தேர்வினை 14 தேர்வு மையங்கள் மூலம் 5393 தேர்வர்கள், தேர்வு எழுதவுள்ளனர்.

<u>தேர்வர்களுக்கான அறிவுரைகள்:</u>

- தேர்வர்கள் மையத்திற்கு வரவேண்டிய நேரம் – காலை 08.30 மணி
- தேர்வர்கள் கண்டிப்பாக நுழைவுச்சீட்டு கொண்டுவருதல் வேண்டும்.
- நுழைவுச்சீட்டில் புகைப்படம் இல்லையெனில் TRB வலைத்தளத்தில் சென்று உரிய படிவத்தினை Print எடுத்து அதில் புகைப்படம் ஒட்டி Gazetted Officer சான்றொப்பம் பெற்று கொண்டு வருதல் வேண்டும். இத்துடன் Stamp Size புகைப்படம் ஒன்று கொண்டு வருதல் வேண்டும். மேலும் இத்தகைய தேர்வர்கள் புகைப்படத்துடன் கூடிய ஏதேனும் ஒரு அடையாள அட்டை (Voter Id, Aadhaar Card, Driving License etc.,) கொண்டு வருதல் வேண்டும்.
- தேர்வு மைய நுழைவாயிலில் காவலர் சோதனை நடைபெறும் நேரம் – காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை.
- தேர்வர்கள் தேர்வறைக்குள் நுழைவுச்சீட்டு (Hall Ticket) மற்றும் நீலம் அல்லது கருப்பு பந்துமுனைப் பேனா (Blue or Black Ball Pen) மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.
- தேர்வு நடைபெறும் வேளையில், தேர்வர்கள் வெளியில் செல்ல அனுமதியில்லை. தேர்வு முடிந்ததும் OMR விடைத்தாளின் பிரதியை (Carbon Copy) தேர்வர்கள் பெற்றுச் செல்ல வேண்டும்.
- அச்சிடப்பட்ட அல்லது கையால் எழுதப்பட்ட தாள்கள் எவற்றையும் தேர்வு அறைக்குள் வைத்திருக்க அனுமதியில்லை.
- கைபேசி, கைக்கணினி, மடிக்கணினி, தரவி அல்லது கணக்கிடும் கருவிகள் போன்றவற்றை இத்தேர்வறைக்குள் வைத்திருக்க அனுமதியில்லை.
- தேர்வறைக்குள் அறைக்கண்காணிப்பாளர் அல்லது சக தேர்வர் ஆகியோருடன் முறைதவறி நடப்பவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- மேற்கண்ட அறிவுரைகளைப் பின்பற்றாத தேர்வர்கள் அன்றையத் தேர்வினைத் தொடர்ந்து எழுத அனுமதிக்கப்படாததோடு, ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் தேர்வுகளைத் தொடர்ந்து எழுத நிரந்தர தடை விதிக்கப்படுவதுடன் காவல்துறை மூலம் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13/9

மாவட்ட ஆட்சித் தலைவர்
கடலூர்